சுதந்திரன்
SUTANTIRAN

★ விலை சதம் 35. வ.ஆ.2007, சித்திரை 9, ந.ஆண் 20, (21-4-76) புதன் புத்தகம் 29, இதழ் 52

● மதுரைச் சிறைச்சாலையில்

# திமுகழகப்பிரமுகர் மரணம்!

## இறுதி ஊர்வலத்தில் கலைஞர் பங்கேற்றார்!

அரசியல் காரணங்களுக்காக கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் திமுகழகப் பிரமுகர்களில் ஒருவர் சிறைச்சாலையிலேயே மரணமானார். இவரது மரணத்துக்கு காரணம் மாரடைப்பு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சிறைக்குள் உயிர் நீத்த இத்தொண்டரின் இறுதி ஊர்வலத்தில் தி.மு. கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு இரங்கலுரை நிகழ்த்தினர்.

இவ்வாறு சிறையில் உயிர் நீத்த திமுகழகத்தொண்டரின் பெயர் சாத்தூர் பாலகிருஷ்ணன். சாத்தூர் திமுகழக ஒன்றியத்தின் செயலாளராக விளங்கியவர். 52வயதுள்ள இவர், அ[illegible]மையில் தி. மு. க. [illegible] கலைக்கப்பட்டு, தி. மு. க. பிரமுகர்கள் கைதுசெய்யப்பட்டபோது, இவரும் கைதானார். மதுரைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

—4-ம் பக்கம் பார்க்க

## செல்வா இல்லத்தில் இராமநாதன் நினைவு விழா!

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப்போராடிய மாபெரும் தமிழ்த் தலைவரான சேர். பொன்னம்பலம் இராமநாதனின் 125வது பிறந்த நாள் விழா, இன்று (21-4-76) மாலை 6 மணிக்கு கொழும்பிலுள்ள தந்தை செல்வாவின் இல்லத்தில், தமிழர் கூட்டணியின் கொழும்புக் கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் தலைமையில் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், ஜேம்ஸ் இரத்தினம், ஆ. தேவராஜன் ஆகியோர் உரை நிகழ்த்துகின்றனர்.

# 'தனிநாடு' கோரிக்கை பற்றி கேள்விக் கணைகள்!

## புதுடெல்லியில் பிரதமர் சிறிமா சமாளிப்பு

இலங்கைத் தமிழர்களின் தனிநாடு கிளர்ச்சி பற்றி அண்மையில் புது டெல்லி சென்றிருந்த பிரதமர் சிறிமாவோவிடம் அங்குள்ள பத்திரிகையாளர்கள் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுத் துளைத்தெடுத்தனர். பத்திரிகை நிருபர்களின் கேள்விக்கு, பதிலளிக்கமுடியாமல் திணறிய பிரதமர் தமிழ் நாட்டுத் தி. மு. கழகம் மீது 'பழி' போட்டு நிலைமையை சமாளித்துக்கொண்டு தாயகம் திரும்பியதாக அறியப்படுகிறது.

இலங்கையில் இயங்கி வரும் 'தனிநாடு' கிளர்ச்சிக்கு தமிழ் நாட்டு தி. மு.க. வைச்சேர்ந்த சிலரே ஆதரவு தருவதாகவும். அதற்காகத் தாம் வருந்துவதாகவும் பிரதமர் புதுடெல்லியில் கூறியுள்வார். தற்போது இந்திய அரசியலில் திமுகழகத்துக்கு எதிரான காற்று பலமாக வீசுவதால், திமுக மீது பிரதமர் தந்திரமாக பழி சுமத்தியுள்ளாரென்று சொல்லப்படுகிறது.

தமிழர் கூட்டணியினரின் பிரிவினைக்கோரிக்கைவெறும் தேர்தல் தந்திரம் என்றே தாம் கருதுவதாகவும், இந்த மாதிரிக்கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் வாக்குகளைப் பெற எண்ணுகின்றனர் என்றும், திருமதி பண்டாரநாயகா அங்கு கூறியுள்ளார்.

"இலங்கை மிகச் சிறிய நாடு என்பதால் 'தனிநாடு' கோரிக்கை சாத்தியமாகாது என்றும், தமிழர்கள் இலங்கை முழுவதும் பரந்து வாழ்வதால், பெரும்பாலான தமிழர்களால் இது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதல்லவென்றும் பிரதமர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

"எப்படியாயினும் 'தனிநாடு' சாத்தியமல்ல; பெரும்பான்மையோர் எங்களுக்கு ஆதரவாகவேயிருக்கிறார்கள். ஒரு சிறு பிரிவினர் தாம் பிரிவினை கேட்கிறார்கள்" என்று பிரதமர் நிருபர்களுக்குப் பதில் கூறிச் சமாளித்திருக்கிறார்.

# யாழ்நகரில் வரலாறு காணாத மாபெரும் 'மே' தின அணிவகுப்பு

## தமிழர் கூட்டணியின் பூரண ஆதரவுடன் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் ஏற்பாடு!

அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் ஏனைய மொழிவழித் தொழிற் சங்கங்களும் இவ்வாண்டு மே நாளை வெகு விமரிசையான முறையில் யாழ்ப்பாணத்தில் கொண்டாட இருக்கின்றன. பல ஆண்டுகளுக்குப் பின் சங்கம் கொண்டாடும் இம் மே நாளுக்கு தமிழர் கூட்டணி தனது பூரண ஆதரவை அளிக்க முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தமிழர் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் நடவடிக்கைக் குழு உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்தில் தொகுதி வாரியாக தொழிலாளர்களையும், இளைஞர்களையும் மே தினத்தையொட்டி நடைபெறும் ஊர்வலத்திலும் அணிவகுப்பிலும் கலந்து கொள்ளச் செய்யுமாறு வேண்டியுள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு ஒரு பிரமாண்டமான ஊர்வலத்தையும் அணிவகுப்பையும் நடாத்தவும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தமிழர் கூட்டணியுடன் இணைந்து ஒழுங்குகள் மேற்கொண்டு வருகின்றது. இந்த ஊர்வலம் யாழ். நாச்சிமார் கோவில் சந்தியில் இருந்து ஆரம்பமாகி காங்கேசன்துறைவீதிவழியாகச்சென்று நாவலர் சந்தியில் திரும்பி வெலிங்டன் சந்தி, விடோ படமாளிகை கஸ்தூரியார்

—4-ம் பக்கம் பார்க்க

## தமிழர் கூட்டணி சிறப்பு மாநாடு; இன்று ஆலோசனைக் கூட்டம்!

வட்டுக்கோட்டையில் நடைபெறவிருக்கும் தமிழர் கூட்டணியின் சிறப்பு மாநாட்டு ஏற்பாடுகளுக்கான பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் இன்று (21-4-76) மாலை 4 மணிக்கு மூளாய், சுழிபுரத்திலுள்ள தமிழர் கூட்டணிச்செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களுடைய இல்லத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள தமிழர் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவைக் கிளைகளின் பிரதிநிதிகளையும் தமிழர் கூட்டணி ஆதரவாளர்களையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் நாயகம் கோருகிறார்.

# சட்டமறுப்புத் தீர்மானத்தை விளக்கும் சிறப்பு கூட்டங்கள்!

## தமிழீழத் தலைநகர்களில் நடைபெறும்!

எதிர்வரும் மே 14, 15 16ம் திகதிகளில் வட்டுக்கோட்டையில் நடைபெறவிருக்கும் தமிழர் கூட்டணியின் சிறப்பு மாநாட்டில் எடுக்கப்படவிருக்கும் தீர்மானங்களை விளக்கும் சிறப்புக் கூட்டங்களை தமிழீழத் தலைநகர்கள் ஒவ்வொன்றிலும் நடத்துவதென்று தமிழர்கூட்டணி தீர்மானித்திருக்கிறது.

வட்டுக்கோட்டைமாநாட்டில் தமிழர் கூட்டணியின் உத்தேசசட்டமறுப்பு இயக்கத்துக்கான திட்டங்கள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டு அதன் முதலாவது கட்டம் பொதுமக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்கப்படவிருக்கிறது. இயக்கம் தொடங்கும் திகதியும் அங்கு அறிவிக்கப்படும்.

இதைத் தொடர்ந்து சட்டமறுப்புத் தீர்மானங்களை விளக்கியும், பொதுமக்கள் அதில் ஏற்கவேண்டிய பங்கு குறித்தும் எடுத்துரைக்கும் சிறப்புக் கூட்டங்களை தமிழீழத்தின் தலைநகரங்களான திருகோணமலை, மன்னார்,

—4-ம் பக்கம் பார்க்க

# உடை திருடிய இலங்கை பேராசிரியருக்கு 50 பவுண் அபராதம்!

பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து 100 பவுண் நன்கொடை பெற்றுக்கொண்டு கருத்தரங்கொன்றில் கலந்து கொள்ள இலண்டன் சென்றிருந்த இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர், அங்கு ஒரு மேலங்கியையும் (சேட்) ஒரு சோடி அரைக்காற்சட்டைகளையும், இரண்டு'டை'களையும் கடையொன்றிலிருந்து திருடிக்கொண்டாராம், இதற்காக அவருக்கு 50 பவுண் அபராதம் விதிக்கப்பட்டதுடன், 20 பவுண் செலவு தொகையும் அவரிடமிருந்து அறவிடப்பட்டது. திருடப்பட்ட உடைகளின் மொத்தப் பெறுமதி 7.30 பவுண் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இலண்டன், மால்பரோ மாஜிஸ்ரேட் திரு. ஜோன் ஹம்ஸ்வோத் இந்த அபராதத்தை விதித்து தீர்ப்பளிக்கையில் — "இது உமக்குப் பெரிய தொரு மானக்கேடாகும். இந்த நாட்டுக்கு ஒரு விருந்தாளியாக அழைக்கப்

—4-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் இன்றைய பரிதாப நிலைமை!

1964ம் ஆண்டு இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்றின் பிரகாரம், நாடற்றவர்களெனக் கருதப்பட்ட 975,000 மக்களில் 525,000 பேருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டு அடுத்துவரும் பதினைந்து வருடங்களில் அவர்களைத் தாய் நாட்டுக்கு அனுப்புவதெனவும் 300,000 பேருக்கு இலங்கைப் பிரசாவுரிமை வழங்கப்பட்டு, இங்கேயே தங்குவதற்கு அனுமதி வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. ஒன்றிலும் சேராது எஞ்சியிருந்த 150,000பேரின் தலைவிதி பற்றிப் பின்னர் முடிவெடுப்பதெனவும் தீர்மானமாயிற்று, இதன்படி 1974ம் ஆண்டு சனவரி மாதம் திருமதி காந்திக்கும், திருமதி பண்டாரநாயக்காவுக்கும் இடையில் புதிதாகச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின்படி மீதமாயிருந்த 150,000 பேரையும் இரு நாடுகளுக்குமிடையில் 75,000 பேர்வீதம் பங்கிட்டு ஏற்றுக்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

இந்த உடன்படிக்கைகள் யாவும் மிகத்தாமதமாகவே நடைமுறைப் படுத்தப்பட்டன. 1974ம் ஆண்டு இங்குள்ள இந்திய உயர் ஸ்தானீகராலயம் தனது பட்டியல்களைப் பூர்த்தி செய்து முடித்தபோது 400,000 பேர் வரையில் மாத்திரமே இந்தியப்பிரசாவுரிமைக்காக விண்ணப்பித்திருந்தனர் என்று தெரிய வந்தது. இதே காலத்தில் ஏறக்குறைய 700,000 பேர் வரையில் இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்திருந்த போதிலும் அவர்களில் 140,000 பேர் மட்டுமே 1974ம் ஆண்டு இறுதிப்பகுதிவரை இலங்கைப் பிரசையாகப்பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

"சாதாரணமாகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வு ஏழ்மை நிறைந்ததாகவும், வசதிக்குறைவானதாகவும், காணப்படினும், அவர்களைச் சுற்றியுள்ள பல சிங்கள விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தோடு ஒப்பிட்டு நோக்குகையில் இவர்களின் நிலை சற்று மேம்பட்டதாகவே காணப்படுகிறது" என்ற அடிப்படையிலேயே அரசாங்கக் கொள்கைகள் அமைந்திருந்தது.

ஆனால் சமீபத்திய வருடங்களில் ஏற்றுமதி வர்த்தகத் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சிகளினாலும், உள் நாட்டில் ஏற்பட்ட பணவீக்க நிலைமைகளினாலும். தோட்டத் தொழிலாளர்களினுடைய வாழ்க்கைத்தரம் குறிப்பிடத்தக்களவு சீர்கெட ஆரம்பித்தது. 1974ம் ஆண்டு அளிக்கப்பட்ட 30 வீதம் ஊதிய உயர்வுக்குப் பின்னரும் கூட, ஒரு தோட்டத் தொழிலாளியின் குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, பிள்ளை அத்தனை பேர் சேர்ந்து உழைத்தும், அவர்களுடைய மாத வருமானம் £6.50 பவுணைத் தாண்டுவது மிசுக்கடினமாகவே இருந்தது. மேலதிகமாக ஒவ்வொரு தோட்டத் தொழிலாளிக்கும் கிழமைக்கு இரண்டு இருத்தல் அரிசியும், மூன்றரை இருத்தல் மாவும், மாதத்திற்கு மூக்கால் இருத்தல் சீனியும் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டன.

இதற்கிடையில், சகல வெளி நாட்டார் ஆதிக்கத்தின் கீழ் உள்ள தோட்டத் தொழில்கள் யாவும் தேசியமயமாக்கப்படும் என 1975ம் ஆண்டு அரசாங்க அறிக்கையொன்று கூறியது. ஏற்கனவே நன்கு திட்டமிடப்படாத அடிப்படையில் நிலச்சீர்திருத்த சட்டவிதிகளின் கீழ் அரசாங்கத்தால் கையேற்கப்பட்ட 80,000 ஏக்கர் தேயிலைத் தோட்டக் காணிகளும் உற்பத்தி நோக்கங்களுக்காக இது வரையும்திருப்பி அளிக்கப்படாமை நிலைமையை இன்னும் மோசமாக்கியிருந்தது. இவற்றில் பெரும்பாலான காணிகள் கூட்டுறவு ஸ்தாபனங்களின் பொறுப்பில் விடப்பட்டிருந்தன.

வேலை எதுவுமின்றி சம்பளம் பெறும் ஊழல் நிறைந்த உத்தியோகத்தர் வசம் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்த இத்தகைய கூட்டுறவு ஸ்தாபனங்களின் செயலால் கையேற்கப்பட்டிருந்த காணிகள் பயிர்ச் செய்கைக்குட்படுத்தப் படாமலேயே வீணில் விடப்பட்டிருந்தன. பொறுப்பேற்கப்பட்ட தோட்டங்களில் இருந்து எந்த ஒரு தொழிலாளியும் வெளியேற்றப்பட மாட்டார் என அரசாங்கம் போதிய உறுதிமொழிகளைப்பன் முறை வழங்கியிருந்த போதிலும் ஏராளமானோர் உத்தியோக ரீதியில் அல்லாத வழிகளில் வெளியேற்றப்பட்டனர். இன்னும் பலர் தோட்டக் குடியிருப்புலயன் வீடுகளில் இருந்து கொண்டே தமக்குப் பரிச்சயம் இல்லாத வேறு வேலைகளுக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பலர் கண்டி வீதிகளில் பிச்சையெடுக்கக்காணப்பட்டனர்.

தோட்டத் தொழிலாளர்களின் சுகாதார நிலைமைகள் குறித்து ஒரு பூரணத்துவம் வாய்ந்த அறிக்கையொன்றினைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சிங்கள டாக்டர் ஒருவரின் வசதிகள் நிறுத்தப்பட்டமையால் அவருடைய வேலை இடை நிறுத்தப்பட்டது. இந்த வேலைக்குப் போதியளவு முன்னுரிமை கொடுக்கப்படாமையே இதற்குரிய வசதிகள் குறைக்கப்பட்டமைக்குரிய காரணம் என இது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அவரிடம் பின்னர் தெரிவித்திருந்தனர். ஆனால் அவருடைய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகளைப்பற்றி அவர்பிரசுரித்த ஒரு அறிக்கையின் பிரகாரம் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற்ற தோட்டத் தொழிலாளரில் சரி அரைவாசிக்கு மேற்பட்டோர் புரதச்சத்துக்குறைவான போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்தனர் எனத்தெரிய வருகிறது. மேலும் அவர் இது பற்றி எழுதுகையில் "எனது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களில் பலர் கொடிய பட்டினிப்பஞ்சத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவித்துள்ளனர்". எனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று தமிழரசுக்கட்சித் தலைவர்களும், தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசாரும் "இலங்கை—இந்திய ஒப்பந்தங்கள் போதியளவு திருப்திகரமானதாக அமையவில்லை எனவும், பல

**லண்டனிலுள்ள சிறுபான்மை உரிமைக் குழு வெளியிட்டுள்ள**

**வால்டர் சுவோஸ் அறிக்கை**

**பகுதி -(9)**

பிழையான கொள்கைகளைக் கொண்டிருக்கின்றன என்றும்" பகிரங்கமாகத் தாக்கி வருகின்றனர். பெரும்பாலான இந்தியத் தமிழர்களுக்கு பிரசாவுரிமையை மறுக்கும்கட்டாயச் சரத்தியக்கூறுகள் இந்த ஒப்பந்தங்களில் தென்படுவதாகவும் இவர்கள் குறை கூறுகின்றனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரான திரு. எஸ். தொண்டமான் அவர்கள் இவ்வொப்பந்தங்கள் பற்றி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் "இவற்றை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் கால எல்லையான 15வருடங்கள் மிக நீண்டு விட்டதென்றும், இந்த எல்லைமுடிவடையும்போது இதில் சம்பந்தப்பட்ட மக்களில் பலர் 60 வயதைத் தாண்டியிருப்பார்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

தோட்டப் பிரதேசங்களில் நிலவும் கல்விக் குறைபாடுகள் பற்றியும் பல முறைப்பாடுகள் எழத்தொடங்கின. பல பாடசாலைகளில் தமிழ்ப் போதனா

—3-ம் பக்கம் பார்க்க

# அமைச்சர் குமாரசூரியருக்கு ஆபீஸ்பையன் எழுதுகிறான்!

அன்புள்ள அமைச்சர்
குமாரசூரியருக்கு:-

ஆபீஸ் பையனின் வாழ்த்துக்கள்; எதற்கு—புத்தாண்டுக்குத்தானே என்கிறீர்களா? அல்ல அமைச்சரே அல்ல! என்னைப் பொறுத்தவரையில் தமிழர்களின் தேசியப் புத்தாண்டு தை முதல் நாள் தான். அது கிடக்க, நான் இப்போது உங்களுக்கு வாழ்த்து தெரிவித்தது, உங்கள் சூராதி சூரத்தனத்துக்கு — வீராதி வீரத்தனத்துக்குத்தான்!

என்ன இருந்தாலும் நீங்கள் அசகாய சூரர்தான்!

நீங்கள் 'திடீர்' அமைச்சராக வந்ததும் வந்தீர்கள்; பலப்பல புதிய சாதனைகளைப் புரிந்துவருகிறீர்கள்!

இலங்கை அரசியலில்— வெள்ளையன் வெளியேறி சிங்களவர் ஆட்சி வந்த பின்னர், தமிழனுக்கு கிடைத்ததெல்லாம் முத்திரை மந்திரிப் பதவி தானே! ஆக ஜி. ஜி. பொன்னம்பலம், மு. திருச்செல்வம் ஆகிய இருவரைத் தவிர மந்திரி பதவி வகித்த தமிழர் அனைவரும் முத்திரை மந்திரிகளாகத்தானே இருந்தார்கள்!

முத்திரையை எச்சிலை நக்கி ஓட்டுவதுபோல —தமிழர்களை வெறும் எச்சில் பொருளாகத்தான் எண்ணுகிறார்களோ என்னவோ தெரியவில்லை!

வழமையான 'சம்பிரதாயம்' பிசகாமல் நீங்களும் முத்திரை மந்திரியாக வந்தீர்கள், முத்திரை மந்திரியென்றால் ஒருவேளை உங்களுக்குக் கோபம் வந்தாலும் வந்துவிடும்!

உங்கள் அழகான முகத்தில் ஏன் கோபத்தை ஏற்படுத்துவான்? சரி, தபால் மந்திரியாக வந்தீர்கள்!

தபால் தந்தி மந்திரியாக நீங்கள் பதவிக்கு வந்தபின்னர் — உலகிலே எங்கும் காணாத புதுமையாக தந்திகள் தபாலில் அனுப்பப்பட்டன!

தபால்கள் உரிய இடத்துக்குப் போய்ச்சேர சில சமயங்களில் மாதக்கணக்காகியதாகவும் பத்திரிகைகளில் சேதி வருகின்றன; தொலைபேசிகள் அடிக்கடி 'செத்த' விடுகின்றன; யாழ்ப்பாணத்துக்கு 'டிறங்கால்' போட்டால் 'லைன் அவுட் ஆப் ஆடர்' எனும் நிரந்தரமான பதில்! (யாழ்ப்பாணம் எப்போதும் உங்கள் ஆட்சியின் சட்டங்களுக்கு கட்டுப்படாமல், 'அவுட் ஆப் ஓடர்' ஆகத்தான் இருக்கிறது — அது வேறு விஷயம்)

இப்படி எண்ணரிய சாதனைகளையும், புதுமைகளையும் நீங்கள் சாதித்தாலும், அண்மையில் சாதித்தீர்களே ஒரு புதிய சாதனை, அதற்காகத்தான் நான் உங்களுக்கு ஆரம்பத்தில் வாழ்த்துத் தெரிவித்தேன்!

ஆமாம் — 'ஹைஜாக்கிங்' என்றால் இலங்கை மக்களுக்கு அதில் அனுபவம் இதுவரை இல்லை — இப்போது நீங்கள் அதைக் காட்டிக் கொடுத்திருக்கிறீர்கள் முதன் முதலாக!

இலங்கையில் எந்த ஒரு அமைச்சரும் இதுவரைசெய்யாத — செய்யத் துணியாத பலே சாதனையல்லவா நீங்கள் நடத்திய விமான 'ஹைஜாக்கிங்'!

பிரதமர்கூட இப்படியான செயலை நினைத்தும் பார்த்திருக்கமாட்டாரே!

இலங்கையில் எதிர்காலத்தில் இளைஞர்கள் இப்படியான விஷயங்களில் ஈடுபடுவதற்கு நீங்களே முதன் முதலாக அடியெடுத்து கொடுத்திருக்கிறீர்கள்! சபாஷ் அமைச்சரே!

நீங்கள் நடத்திய விமான 'ஹைஜாக்கிங்'கினால்பொது மக்களுக்கு ஏதோ பெரிய கஷ்டம் வந்துவிட்டதாம்! எங்கள் சுதந்திரன் ஆசிரியரும், பாவம் உங்களை கடுமையாக சாடி விட்டார்!

பொதுமக்கள் அப்படி என்ன ஒசத்தியா?

மந்திரியின் வசதிக்காக மக்கள் கஷ்டப்படவேண்டியதுதானே சோசலிச தர்மம்?

சொல்வதற்கெல்லாம் தலையாட்டுகிற ஆட்டுமந்தைக் கூட்டம்தானே இந்த மக்கள்! இல்லாவிட்டால் அவர்கள் ஆராய்ந்துபாரிக்காமல் சென்ற பொதுத் தேர்தலில் 'கை'க்கு வாக்களித்திருப்பார்களா?

அதுசரி—உங்களுக்கும் பொதுமக்களுக்கும்தான் என்ன தொடர்பு? பொது மக்களுக்காக நீங்கள் ஏன் உங்கள் வசதியைப் பறிகொடுக்கவேண்டும்?

நீங்கள் என்ன மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்டு எப்போதாவது தேர்தலில் நின்றீர்களா என்ன? மக்கள்டம் சம்மதம் கேட்டா மந்திரிப் பதவி ஏற்றீர்கள்?

மக்களாம் மக்கள்...! இவர்களுக்காக நீங்கள் ஏன் உங்கள் சுயநலத்தை — டாம்பீக வாழ்வை — குறைத்துக் கொள்ளவேண்டும்?

அடுத்த பொதுத்தேர்தலிலாவது உங்களை ஏதாவது ஒரு தொகுதியில் மக்கள் தேர்ந்தெடுக்கப்போகிறீர்களா என்ன?

எனவே, மக்களுக்காக நீங்கள் வீணே கவலைப்படாமல் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்; அதிகாரம் கையை விட்டுப் போகு முன்பே அனுபவிக்கவேண்டிய யாவற்றையும் அனுபவித்துக்கொள்ளுங்கள்!

எனக்கு ஒரு சிறிய குறை!

கட்டுநாயகா விமான நிலையத்துக்கு செல்லவேண்டிய விமானத்தை 'ஹைஜாக்' செய்து இரத்மலானை விமான நிலையத்தில் இறக்கச் செய்தீர்கள்!

அதை இன்னும் கொஞ்சம் வசதியாக — வெள்ளவத்தையிலுள்ள குறேட்டன் குலுங்கும் உங்கள் வீட்டு மாடியிலேயே இறக்கியிருக்கலாமே!

அப்போது இன்னும் உங்களுக்கு வசதியாக இருந்திருக்குமே!

அடுத்தமுறை மறக்காமல், விமான 'ஹைஜாக்கில்' ஈடுபடும்போது—நேரடியாக உங்கள் வீட்டுக்குமேலேயே விமானத்தை இறக்கச் செய்துவிடுங்கள்?

இங்ஙனம்,
ஆபீஸ் பையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி நிலையை தி. மு. கழகம் சமாளிக்கும்!

# இலட்சிய பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளும்!

## கட்டுப்பாடு காக்குமாறு நெடுஞ்செழியன் வேண்டுகோள்

திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு வகையான நெருக்கடிகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற நேரம் இது.

திராவிட முன்னேற்றக் கழகத்தை எவ்வாறேனும் ஒழித்துவிடவேண்டும், என்று சில கட்சிகளும் ஏடுகளும் சூழ்ச்சிகளில் ஈடுபட்டிருக்கின்றன. தங்களைத் தாங்களே வளர்த்துக் கொள்ளமுடியாத அவைகள் தங்கள் வாழ்வு தி. மு. கழகத்தின் அழிவிலேதான் இருக்கின்றது என்று கருதிச் செயல்பட்டுவருகின்றன.

சிங்கத்தை நேரிடையாக எதிர்த்துப் போராடும் வன்மை சிறுநரிகளுக்கு ஏற்படுவதில்லை:- ஆனால் எதிர்பாராதவிதமாகச் சிங்கம் சிக்கிக்கொள்ளும் போது, சிறுநரிகள் சுற்றிலும் நின்று ஊளையிடுவது வழக்கம். வலையைத் தனது வலிமைத் திறனால் பிய்த்துக்கொண்டு சிங்கம் வெளியேறும்பொது, சிறுநரிகள் இருக்கும் இடம் தெரியாமல் ஓடிமறையும்.

அதேபோன்று, தி. மு.கழகமும் தொல்லைகளையெல்லாம் தூள்தூளாக்கிவிட்டு. மீண்டும் அரசியல்— பொருளியல்— சமூகவியல் — பண்பாட்டியல் — கலையியல் கடமைகளை ஆற்றவேண்டியிருக்கிறது.

நெருக்கடிகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற தி. மு. கழகம், அவற்றிலிருந்து மீளுவதற்குத் தேவைப்படுகின்ற வலிமையைப் பெறவேண்டுமானல். அதற்கு ஒரே வழி கட்டுப்பாட்டைக் காப்பாற்றுவதுதான்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் கட்டுப்பாட்டை வலியுறுத்தி வழியுறுத்தித்தான் கழகத்தை வளர்த்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் வற்புறுத்தியதெல்லாம், கழகத்தோழர்கள் அனைவரும் கழகம் வகுத்துத் தந்துள்ள கடமையைஆற்றவேண்டும்; அதனையும் கண்ணியப் பண்போடு ஆற்றவேண்டும்; அதனையும் கட்டுப்பாட்டுத் தன்மையோடு ஆற்றவேண்டும் என்பவையேயாகும்.

கட்டுப்பாடு என்றால், கழகத்தைச்சேர்ந்த ஒவ்வொருவரும், அதாவது கழக அமைப்பில் மேல்தளத்திலிருந்து அடித்தளம் வரையில் உள்ள ஒவ்வொருவரும், தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக்கொள்ளவும்வேண்டும், கழகத்தின் கட்டுக்கோப்பைக் காக்கவும்வேண்டும் என்பதாகும். கழகத்தின் முழு வலிமையும் கட்டுக்கோப்பில்தான் இருக்கிறது.

கட்டுக்கோப்பு எவ்வாறு வலிமைக்குக் காரணமாக அமையும் என்பது, சிறுவர்க்கான பாடநூலில் சிறந்தவொரு எடுத்துக்காட்டின் மூலம்விளக்கப்பட்டிருக்கும். விறகுக் குச்சிகள் தனித்தனியாக இருந்தால், அவற்றை முறித்துப்போடுவது எளிதாக அமைந்துவிடும். அந்தக் குச்சிகளையெல்லாம் ஒரு கட்டாகக் கட்டிப்போட்டால், அந்தக் கட்டினை முறிப்பது என்பது இயலாத ஒரு செயலாகப்போய்விடும். குச்சிகள் எல்லாம் ஒன்றாக இணைந்து ஒரு கட்டுக்கோப்புக்குள் வரும்போது, வலிமை தானாக ஏற்பட்டுவிடுகிறது. கட்டுக்கோப்பில் இருக்கும் குச்சிகள் கலகலத்துப்போனாலும், கட்டுக்கோப்பே சீர்குலைந்து போனாலும் வலிமை அழிந்துவிடும். வலிமை அழிந்தால், குச்சிகள் முழுவதும் முறிபடுவது இயற்கை.

இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொல்லைகளிலிருந்து மீட்கவேண்டுமானால், கழகத் தோழர்கள் அனைவரும், அடிமுதல் நுனிவரையில், தலைமை அமைப்பிலிருந்து சாதாரண அமைப்பு வரையில் முன்னணியினரிலிருந்து கடைசி அணியினர் வரையில் கட்டிக்காக்கவேண்டியது கட்டுப்பாடேயாகும்.

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு! ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே!” என்று அறிவுறுத்தினார் பாரதியார்.

“திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிரிகள் எவராலும் அழிக்கமுடியாது; கழகத்திற்கு அழிவு ஏற்பட்டால், அது கழகத்தில் இருப்பவர்களாலேயேதான் ஏற்படவேண்டும்” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தவர்க்கு எச்சரித்து அறிவுரை வழங்கினார்.

தி. மு. கழகத்தின் அமைப்பைப் பொறுத்தோ அல்லது கொள்கை குறிக்கோள்களைப்பொறுத்தோ அல்லது செயல்முறைத் திட்டங்களைப்பொறுத்தோ எந்த ஒரு முடிவு எடுக்கப்படவேண்டுமானாலும் அதற்காக உரியமுறையில் சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. எந்த ஒரு கருத்து பற்றியும் விவாதிக்க, பரிந்துரைசெய்ய, ஒத்த அல்லது மாறுபட்ட தன்மையை எடுத்துக்கூற, இறுதியில் முறைப்படி தக்கதொரு முடிவினை மேற்கொள்ள செயற்குழு — பொதுக்குழு போன்ற அமைப்புக்கள் சட்டதிட்டப்படி அமைந்திருக்கின்றன.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் கட்டுப்பாட்டு விதிகள் இருக்கின்றன; குடும்பத்தினர் மட்டுமே கூடிக் கலந்து பேசிமுடிவு எடுக்கவேண்டிய கட்டுப்பாட்டு விதிகள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இருக்கின்றன; நாட்டுக்கு நாடு தனித்தனியாகவே கட்டுப்பாட்டு விதிகள் இருந்து வருகின்றன; அதுபோலவே ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் கட்டுப்பாட்டு விதிகள் இருக்கின்றன.

கழகப் பொறுப்பாளர்களோ அல்லது கழகத்தின் தலைமைச்செயற்குழுவோ அல்லது கழகத்தின்பொதுக்குழுவோ கூடிக்கலந்து விவாதித்து முடிவு எடுக்கவேண்டிய பிரச்சினைகளை, அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்துவது கழக கட்டுப்பாட்டிற்குப் புறம்பான செயலாகும்.

பொதுமக்களுக்குத் தெரி[illegible] முடிவுகள் மட்டுந்தாம் பொறுப்பான அறிக்கைகள் மூலம் வெளியிடப் பெறலாமேயல்லாமல், முடிவு ஏதும் முறைப்படி ஏற்படாத, விவாதிக்கப்பட்ட கருத்துக்கள்—விவாதிக்கப்படவேண்டிய கருத்துக்கள்—விவாதிக்கப்படக்கூடிய கருத்துக்கள் ஆகியவற்றைத் தாங்கள் தங்களின் முடிந்த முடிவாகக் கருதிக்கொண்டு, அறிக்கைகள் வெளியிடுவது, கழகக் கட்டுக்கோப்பைக் குலைக்கும் செயலாக அமையும். அப்படிப்பட்ட அறிக்கைகளால் பொதுமக்களுக்குத் தெளிவு ஏற்படாது; அவைகள் கழகத் தோழர்களிடையே குழப்பத்தையே உருவாக்கும்.

இந்த நெருக்கடி நேரத்தில், கழகத்தின் சீரிய எதிர்காலம் பற்றிய எந்த ஒரு கருத்துப்பற்றி விவாதித்து முடிவு எடுக்கவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டாலும், அதற்காக, உரியவர்கள் முறைப்படி கூடும் சூழ்நிலையை எதிர்பார்ப்பதுதான் முறையாகுமேயல்லாமல், அறிக்கைகள் மூலம் பொதுமக்களிடத்தில் விவாதத்தையும், குழப்பத்தையும் உருவாக்குவது பயனளிக்காது. கழகத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லி முறையல்லாத முறையில் ஈடுபட்டுக் கழகத்திற்கு அழிவினைத் தேடலாகாது.

“வழிநோக்கான் வாய்ப்பன
செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது

என்பது வள்ளுவர் வாக்கு.

ஒருவன் நல்வழியையும் நோக்காமல், பொருத்தமானவற்றையும் செய்யாமல் பழியையும் பார்க்காமல், நற்பண்பையும் பெறாமல் இருந்தால், அவன் பகைவர்க்கு மிக எளியவனாகிவிடுவான் என்கிறார் வள்ளுவர்.

தி. மு. கழகத்தின் ஆக்கப் பணிகள் பற்றியும், அவற்றை நடைமுறைப்படுத்தும் விதம்பற்றியும் நானும், கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், கழகப் பொருளாளர் பேராசிரியர் அவர்களும் அடிக்கடி கலந்து பேசி வருகிறோம் என்பது மட்டுமல்லாமல், கழகத்தின் பொறுப்பாளர்கள், காப்பாளர்கள் பலரோடும் தொடர்புகொண்டு தலைமைக்கழக அலுவலகமாம் அன்பகத்தில் உரையாடல் நடத்தியும் வருகிறோம்.



தி. மு. கழகத்தின் எதிர்கால, ஆக்கப்பணிகள் குறித்தும், கழகக்கட்டுப்பாடுகளை நிலைநாட்டுவது குறித்தும் தலைமைக் கழகம் தக்க நேரத்தில், தக்க முடிவுகளை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை உறுதிப்பாட்டோடு கழகத் தோழர்கள் அனைவரும் தங்களுடைய முறையான கடமைகளைத் தொடர்ந்து ஆற்றி வரவேண்டும் என்று அனைவரையும் பொதுச்செயலாளர் என்றமுறையில் கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு. கழகத்தின் மொத்த உருவம் பேரறிஞர் அண்ணா அவர்கள்; அவரின் உடலுறுப்புக்கள் தாம் கழகத்தின் பல இலட்சக்கணக்கான உறுப்பினர்கள். கழக உறுப்பினர்கள் என்ற உடலுறுப்புக்களெல்லாம் செம்மையாகத் தத்தமக்குரிய வழியில் கடமையாற்றினால் தான், பேரறிஞர் அண்ணா என்ற கழகம் உடல் நலத்தோடும் — வளத்தோடும்— வளர்ச்சியோடும் இயங்கும்.

கூடிக்கலந்து பேசி முடிவு எடுக்கப்படாமல், தன்னிச்சையாக வெளியிடப்படும் அறிக்கைகள் தவிர்க்கப்படவேண்டும்; கழகத்தைச் சீர்குலைக்கும் தன்மையில், நஞ்சு ஏடுகளில், எப்படிப்பட்ட செய்திகள் வந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது, அறவே ஒதுக்கித்தள்ளவேண்டும் என்று கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

பொறுத்திருப்போம் — நல்ல காலம் வரும் என்ற நம்பிக்கையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய நெறிமுறையில் நடைபோடுவோமாக!

## தமிழ்த் தோட்...

—1-ம் பக்கத் தொடர்

பீடப் பிரிவுகள் குறைக்கப்பட்டன. பல இடங்களில் அவை முற்றாகவே நிறுத்தப்பட்டு சிங்களப் பிரிவுகள் அவ்விடங்களை ஆக்கிரமித்துக் கொள்ளத் தலைப்பட்டன. “இந்தியாவுக்குச் செல்ல இருக்கிறவர்களுக்குச் சிங்களப் போதனை எதற்காக?” எனத் திரு. தொண்டமானும் இது குறித்துக் கேள்வி எழுப்பினார்.

இந்தியாவுக்கு இடம் பெயர்ந்து செல்லச்சம்மதித்தவர்களை அங்கு அனுப்பும் பணி மிகத்தாமதமாகியதுடன், இவர்கள் தடுப்பு முகாம்களிலும் பல மாத காலம் தங்கிச் சீரழிய வேண்டிய இழி நிலைக்கும் உள்ளானார்கள்.

—வளரும்

குறிப்புக்கள்:-

‘இந்தியத் தமிழர்கள்’ எனும் இக்கட்டுரையில் பின் வரும் விடயங்களைக் கட்டுரையாளர் குறிப்பிடத் தவறிவிட்டார்.

(1) மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்களிடையே உணவுப் பற்றாக் குறையை ஏற்படுத்துவதன்மூலம் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் அவர்கள் மீது கட்டாயமாக திணிக்கப்படுகிறது.

(2) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேறும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பொலிசாரும் ஆயுதப் படைகளும்கொடுக்கும் தொல்லைகள் பற்றிக் கட்டுரையாளர் குறிப்பிடத் தவறிவிட்டார்.

(3) இன்றைய நிலையை விட, வருங்காலம் பற்றியே இலங்கைத் தமிழர் கவலைப்படுவதாக கூறப்பட்டிருப்பதும் தவறானது; ஏனெனில்—

(அ) குடியுரிமைச் சட்டங்கள் தமிழர்களை சந்தேகப் பிரஜைகளாக்கியுள்ளன.

(ஆ) சிங்களம் மட்டும் சட்டம் தமிழர்களை கல்வியறிவற்றவர்களாக்கிவிட்டது.

(இ) குடியேற்றங்கள், தொழில் வழங்குவதில் பாரபட்சம், கல்வி, வர்த்தகம் போன்ற துறைகளிலும் தமிழர்கள் முன்பும் பாதிக்கப்பட்டுள்ளனர்; எதிர்காலத்திலும் பாதிக்கப்படுவார்கல்; இன்றும் பாதிக்கப்படுகிறார்கள்.

— பூ.

## முத்தமிழ் மன்ற செயலாளர் விளக்கம்

7-4-76 சுதந்திரனில் ‘அமைச்சரை அழைப்பதற்கு எதிர்ப்பு’ எனும் செய்தி தொடர்பாக புகையிரத திணைக்கள முத்தமிழ் மன்ற செயலாளர் சுதந்திரன் ஆசிரியருக்கு அனுப்பியுள்ள ஒரு குறிப்பில், அமைச்சரை அழைக்கும் முடிவு செயற்குழுவின் பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்றும், ஒரு சிலரின் முடிவு அல்ல என்றும் தெரிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

சுதந்திரன்
SUTANTIRAN

# "ஆறு அம்சத் திட்டத்துக்கே பதிலில்லை இதில் வேறு 12 அம்சமா?"

"தமிழ் மக்களின் உரிமைகள் சம்பந்தமாக தமிழர் கூட்டணி ஏற்கெனவே 1972ம் ஆண்டு ஆறு அம்சக்கோரிக்கையொன்றை பிரதமருக்கு அனுப்பியிருந்தது. அது பற்றி பேச்சு மூச்சுக் கூட இல்லை; அதன் பின்னர், தமிழர் கூட்டணியின் இலட்சியம் புதிய வடிவமெடுத்து, அந்த இலட்சியத்தையே தனது இறுதி முடிவாகக்கொண்டு தமிழர் கூட்டணி தமிழ்த்தேசிய இனத்தின் சுதந்திரத்தையும் விடுதலையையும் நிலைநாட்ட உறுதியுடன் உழைத்து வருகிறது. இப்போது நீங்கள் 12 அம்சம் பற்றி பேசுகிறீர்கள். உங்கள் 12 அம்சத்திட்டத்தை அரசாங்கம் விரும்பினால் அமுல்படுத்தலாம் தானே, அதற்கு எங்கள் ஆதரவு எதுவும் அவசியமில்லையே!"

## 'முற்போக்கு' எழுத்தாளருக்கு அமிர்தலிங்கம் பதில்!

—இவ்வாறு அண்மையில் தம்மைச் சந்தித்துப்பேசிய கம்யூனிஸ்ட் சார்பு எழுத்தாளர் சங்கமான முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினருக்கு தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் எடுத்துக்கூறியதாகத் தெரியவருகிறது. ஆறு அம்சம், 12 அம்சம் என்று கூறி தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை மேலும் தாமதப்படுத்தமுடியாது என்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை அவர்களை இதே பிரமுகர்கள் சந்தித்த போது, "அரசியல் சட்டத்தை திருத்தியமைத்தாலும் கூட, தமிழர்களது பிரச்சினை தீராது என்றும், தமிழனின் அடிமைத்தனம் தீரவும், தமிழ், சிங்கள இனங்கள் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும், சகோதரத்துவத்துடனும் சோசலிசக் குறிக்கோளை நோக்கி முன்னேறுவதற்கு இரண்டு தேசிய இனங்களையும் செயற்கையாக இணைத்து பிரிட்டிசார் 1833ம் ஆண்டுபோட்ட அடிமைப்பிணைப்பு அறுத்தெறியப்படவேண்டுமென்றும், திரு. கதிரவேற்பிள்ளை ஆணித்தரமாக எடுத்துக் கூறியதாகத்தெரிகிறது.

## கம்யூனிஸ்டுகளின் முகமூடியை கிழிக்கிறார் பூநகர் மரியதாஸ்!

"ஈழ நாட்டின் கம்யூனிஸ்ட்டுகள் சொல்லொன்றும், செயலொன்றுமாகத்தான் இயங்கிவருகின்றனர். இந்நாட்டின் பிரச்சினைகளை முடிமறைத்து தமிழர்கள் சுயமாக வாழ நினைப்பதை தடை செய்ய பக்கபலமாக இருப்பதுதான் தேசிய ஒருமைப்பாடு என ஊக்குரலபோடும்இவர்களைப்போன்ற கோமாளிகளை காண முடியாது.

இவ்வாறு திருக்கோணமலை "புதுமை நெஞ்சங்கள்' நடாத்திய விமர்சன அரங்கில் எழுத்தாளர் பூநகர் மரியதாஸ் செம்பருத்திகள் எனும் புதுக்கவிதை நூலை விமர்சித்தபோது கூறினார். திருக்கோணமலை திருமுருகானந்த வாகீசசாலை அரங்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு செ. நவசோதிராஜா தலைமை தாங்கினார்.

தொடர்ந்து பூநகர் மரியதாஸ் பேசுகையில் கூறியதாவது:—

"ஈழநாட்டில் தமிழர்களின் பிரச்சினைகளை எந்த கவிஞனுமே கவனிப்பது கிடையாது. இந்நாட்டில சிறுபான்மையினத்தின் பிரச்சினைகளை தீர்க்காது தேசிய ஒருமைப்பாட்டுக்காக கவிதையெழுதுவதும் மேடைகளிலே ஊக்குரலிடுவதும் பெரும் கோமாளித்தனம், இந்நாட்டின் இனத்துவேசத்துக்கு தூபம் காட்டுவது சிங்கள தமிழ் கம்யூனிஸ்ட்டுகளே" என்றார்.

தொடர்ந்து புதுமை நெஞ்சங்களின் சார்பில் திருமலை சுந்தா தனது தொடக்கவுரையை ஆரம்பித்து பேசுகையில் திருக்கோணமலையில் செத்துவிட்ட இலக்கியவுணர்ச்சியை தட்டியெழுப்பவும்— திசைமாற்றப்பட்ட இலக்கியப் போக்கை உண்மையான மக்கள் இலக்கியமாக மாற்றவே புதுமை நெஞ்சங்கள் ஆரம்பிக்கப்பட்டது என்றார்.

இவ்வரங்கினில் மயில் மகாலிங்கம், வ. அ. இராசரத்தினம்—தா. பி. சுப்பிரமணியம்—ஆகியோர் கலந்துகொண்டனர். பதிலுரைக்காக அழைக்கப்பட்ட கே. டானியல், நல்லை அமிழ்தன் ஆகியோர் சமூகம் கொடுக்கவில்லை.

## புத்தக வெளியீடு

சேர். பொன். இராமநாதன் அவர்களின் 125வது ஜயந்தி தினத்தை முன்னிட்டு புலவர் போற்றும் புரவலர் சேர். பொன். இராமநாதன் என்ற புத்தகத்தை மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தினர் வெளியிட்டுள்ளார்கள்.

## உடை திருடிய...

—1-ம் பக்கத் தொடர்

பட்ட நீர், இங்கு வந்து எங்கள் கடைகளில திருட ஆரம்பித்துவிட்டீர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அபராதம் விதிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியரின் பெயர் கலாநிதி தர்மசுல டீ சில்வா என்பதாகும். இச்செய்தியை ஏப்ரல் 11ம் நாள் வெளிவந்த 'சண்டே ரெலிகிராப்' வெளியிட்டுள்ளது.

## மதுரைச்சிறைச்...

—1-ம் பக்கத் தொடர்

சிறையில் மரணமான இவரது பூதவுடல் இவரது சொந்த ஊரான சாத்தூருக்கு எடுத்துவரப்பட்டு, அங்கு எரியூட்டப்பட்டது. இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக கழகத் தலைவர் டாக்டர் கலைஞர், சென்னையிலிருந்து சாத்தூருக்குசென்றிருந்தார். கொதிக்கும் வெயிலில் இரண்டு மைல்கள் நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் கலைஞர் வெறுங்காலுடன் நடந்தே வந்தார்.

மறைந்த திரு. பாலகிருஷ்ணன் பற்றி கருணாநிதி எழுதியிருப்பதாவது;-

"இலட்சிய கீதம் பாடிக்கொண்டிருந்த பூஞ்சோலைக் குயில்களில் ஒன்றின் குரல் வளையை சாவு நசுக்கிப் போட்டுவிட்டது. தனது வீட்டு வாசலைக் கடந்து இரண்டு மாதங்களுக்கு முன்புபோனவர், இப்போது தனது வீட்டு வாசலைக் கடைசித் தடவையாக கண்மூடிய படி தாண்டிவிட்டார்.

"உயிர் பிரியும் போது என்ன சொல்ல நினைத்தானோ அந்த மாவீரன்! அவன் சொல்லுவதைக் கேட்க உற்றார் உறவினரோ நண்பர்களோ குடும்பத்தினரோ இல்லாத நிலையில், எதிர்பாராத முடிவு அவனை ஆட்கொண்டுவிட்டது.

"தொண்டர்களின் வியர்வையே இந்த இயக்கம் அவர்களின் உழைப்பே கழகத்தின் மாண்பு. அவர்களால் வந்த வாழ்வுதான் எல்லாம்.

"நமது கழகம் சோதனைகளைத் தாங்கிக்கொள்ளும் காலம் இந்தக்காலம். அடுக்கடுக்காக வரும் வேதனைகளைத் தாங்கிப் பழக்கப்பட்டவர்கள் நாம். வெந்த புண்ணிலே வெல் பாய்ந்தது போல இந்தச் செய்தி நம்மைக் கலக்கிவிட்டது.

"திமுகழகம் கொள்கை வீரர்களின் கூடாரம். இலட்சியவாதிகளின் பாடி வீடு. ஒன்பதாண்டு காலம் ஆட்சிப்பொறுப்பிலே யிருந்து, அந்த சுகத்தை மட்டும் அனுபவித்துவிட்டு, பதவி போனதும் புதுச்சுகம் பெறுவதற்கு இடம்தேடி அலைகிறார்களே சிலர்— இவர்கள் எல்லாம் இல்லாத காலத்திலேயே இந்த இயக்கத்தை அங்குலம் அங்குலமாக வளர்க்க தங்கள் இரத்தத்தை நீராகப் பாய்ச்சிய தொண்டர்களின் அணி அப்படியே தானிருக்கிறது, கட்டுக் குலையாமல் — கட்டுப்பாடு தளராமல்!

அந்த மணியில் ஒரு மணியாகத் திகழ்ந்தவர்தான் சாத்தூர் பாலகிருஷ்ணன். இன்று அவருடைய காலம் ஒரு சரித்திர ஏடாகிவிட்டது."

## யாழ்நகரில்...

—1-ம் பக்கத் தொடர்

வீதி, மின்சாரநிலைய வீதி, காங்கேசன்துறை வீதி வழியாகச் சென்று யாழ் முற்றவெளியை அடையும்.

மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாக இருக்கும் இவ் ஊர்வலத்தில் தமிழர் கூட்டணித் தலைவர்களும் கலந்து கொண்டு நடத்துவருவார்கள். மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள் மகளிர் ஆகியோரும் இவ் ஊர்வலத்தில் பங்கேற்பர். மாலை 5.00 மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்தில் தொழிற் சங்க தலைவர்களும் தமிழர் கூட்டணியின் முக்கிய தலைவர்கள் பலரும் சிறப்புரையாற்ற உள்ளனர்.

மேதின ஒழுங்குகளை ஆராயும் பொருட்டு அரசாங்க எழுதுவினைஞர் சங்க தலைவர்கள் சில தினங்களுக்கு முன் தமிழர் கூட்டணி அலுவலகத்தில் கூடினர். இதில் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், உடுவில் பா. உ. திரு. வி. தருமலிங்கம்; கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் ... சிறீதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சட்டமறுப்புத்..

—1-ம் பக்கத் தொடர்

வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடத்துவதென்றும் தமிழர் கூட்டணி முடிவுசெய்திருக்கிறது.

இதேசமயத்தில் தமிழர் கூட்டணியின் மாதர் இயக்கமான தமிழ மகளிர் பேரவையும், இளைஞர் அமைப்பான தமிழ் இளைஞர் பேரவையும் தங்கள் அமைப்புகளைப் பலப்படுத்துவதிலும் தொண்டர்களைத் திரட்டுவதிலும் இப்போது சுறுசுறுப்புடன் பணியாற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

ஆரோக்கிய வாழ்வுக்குப் பனைவெல்லம் உபயோகியுங்கள்

15 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மில்க் வைற் சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி நவீன முறையில் பனை வெல்லம் என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் ஏப்பிரல் மாதம் 21ந் திகதி புதன் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org